www.tamilarangam.net

நம்பிக்கை
சர்வதேச வெளியீடு
NAMBIKKAI
International

பகுதி 2 இல. 6 | செப்டம்பர்-ஒக்டோபர் 1999

இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



# செம்மணியில் பாரிய புதைகுழிகள் இல்லை என விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது

கிருஷாந்தி குமாரசுவாமி கற்பழிப்பு கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து முன்னைநாள் இராணுவத்தினரும் மற்றும் மூவரும் குறிப்பிட்டது போல் செம்மணியில் பாரிய புதை குழிகள் இல்லையென்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. செம்மணி பாரிய புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் 1999 ஜூன் மாதம் ஆரம்பமாகி செப்தம்பர் மாதம் முடிவடைந்தது. இறந்தவர்களின் உடல் பகுதிகளும், மற்றும் அவர்களது சொந்தப் பொருட்களும் கொலையுண்டவர்களை அடையாளம் காணவும், அவர்கள் எவ்வாறு இறந்தனர் என்பதை விஞ்ஞான முறையில் நிர்ணயிக்கவும் இப்போது ஆய்வுகள் நடைபெறுகின்றன.

சர்வதேச அனுகுமுறைகளுக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப அனைத்து விசாரனைகளும் நடைபெறுகின்றன என்பதை உறுதி செய்ய புதைத் குழிகள் தோண்டுமிடத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் வைத்தியர்கள், ஆசியா பவுண்டேஷன் பிரதிநிதிகள் உட்பட சர்வதேச நிபுணர்கள், மற்றும் நிபுணர்கள் அல்லாதோர் அவதானிகளாக இருந்தனர். தளத்தின் விசாரனைகளை அமெரிக்க ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சுவீடன் ஆகிய அரசாங்கங்களின் பிரதிநிதிகள் கண்கானித்தனர்.

புதைகுழி தோண்டும் வேலைகள் பூர்த்தியானபின் சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில், 400 பேர் வரை கொன்று புதைக்கப்பட்ட பாரிய புதைகுழிகள் செம்மணியில் உள்ளதாக (ஜூன் 1998ல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்குவதற்குச் சற்றுமுன்) கைதிகள் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த போதிலும், எட்டு வெவ்வேறு புதைகுழிகளில் 15 சடலங்கள் இருந்ததாக இரசாயண பகுப்பாய்வு விசாரனைகளிலிருந்து தெரியவந்துள்ளது, எனக் குறிப்பிட்டுள்ளது. மேலும் உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் கைதிகள் குறிப்பிட்ட பகுதிகளில் பாரிய புதைகுழிகள் இல்லையென ஏற்றுக்கொண்டுள்ளனர். மற்றும் நிபுணர்களின் தற்காலிக விசாரனைகளின்போது புதைகுழிகள் களவாகத் தோண்டப்படவில்லை என்று காணப்பட்டுள்ளது. இது உண்மையில் சில சம்பந்தப்பட்டவர்கள் கைதிகள் வெளியிட்ட தகவல்களையடுத்து ஏற்கனவே புதைகுழிகளைத் தோண்டி சடலங்களை அகற்றியுள்ளனர் என்ற அபிப்பிராயத்தை நீக்கியுள்ளது.

மனித உரிமைகளின் வைத்தியக் குழுவின் இரசாயண பகுப்பாய்வாளர் டாக்டர் மெலிஸ்ஸா கொனோர் கொழும்பிலுள்ள ஆசியா பவுண்டேஷனில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில், "செம்மணியில் புதைகுழிகள் காணப்பட்ட இடங்களைப் பாரிய புதைகுழிகள் எனக்கூறமுடியாது, ஆனால் ஓரிரு நபர்கள் புதைக்கப்பட்ட தனியார் குழியாகும்", எனக் குறிப்பிட்டார் . அதேவேளை மனித உரிமைகள் வைத்தியர் குழு வெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கையில், "சர்வதேச தரத்திற்கு அமைய இலங்கையின் இரசாயண பகுப்பாய்வுக்குழு புதைகுழிகளை தோண்டும் வேலைகளில் நேர்மையாகச் செயல்பட்டுள்ளது", என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. விசாரனைகள் பற்றி விமர்சனம் செய்த சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதி இங்ரிட் மஸாஜ, "இந்த விசாரணைகளை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்வதையிட்டு நாம் திருப்தி அடைந்துள்ளோம். குறிப்பாக ஆயுத மோதலுக்கு இடையிலிருந்து கொண்டும் அரசாங்கம் அதன் ஆட்சிக்காலத்தில் ராணுவத்தினரால்மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் சடவங்களைத் தோண்டி எடுப்பதில் அதிகாரிகள் காட்டும் துணிவு பாராட்டுக்குரியது", எனக் குறிப்பிட்டுள்ளார். செம்மணியில் மர்மமான முறையில் புதைக்கப்பட்ட இடங்களைத் தோண்டுவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட வெளிப்படையான விசாரணைகளை வேன்கூவரின் கனேடிய பொலிஸாரின் பிரதம விசாரணையாளர் றொபர்ட் ஸ்டேயர் பாராட்டியுள்ளார் .

"கடத்திச் சென்று சட்டவிரோதமாகப் புதைக்கப்பட்டதில் சம்பந்தம் உடையவர்களென (ஐந்து கைதிகளும்) குறிப்பிட்ட இராணுவ உத்தியோகத்தர்களை அடையாளம் காண குற்றவியல் விசாரனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடையாளம் காணல் முடிவடைந்ததும் அவர்களது வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டபின் அவர்கள் வகித்த பங்கு பற்றி உண்மைநிலை அறியப்படும. குறிப்பிட்ட குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டோர் என சந்தேகிக்கப்படும் நபர்களைக் கைது செய்ய பின்னர் தீர்மானிக்கப்படும்" என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**• வேலணை**

வேலணை மாணவ மணிகளின் அறிவு வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நூலகமொன்று வேலணையில் திறக்கப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேச சபைத் தலைவர் என். கே. மூர்த்தி வைபவரீதியாக நூலகத்தைத் திறந்து வைத்தார்.

**• யாழ்ப்பாணம்**

யாழ் மத்திய கல்லூரியின் கணணிப் பயிற்சி நிலையத்திற்கு கல்வி அமைச்சு மேலும் பத்துக் கணணிகளை வழங்கியுள்ளது. தொடர்ச்சியான மின் வழங்கல் இருந்த போதிலும் பழைய மாணவராகிய யாழ்-மாவட்ட பா.உ. டக்ளஸ் தேவானந்த இக்கல்லூரிக்கு மின் பிறப்பாக்கியொன்றை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**• அளவெட்டி**

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்காக கட்டப்பட்ட புதிய கட்டடத்தை வலிகாமம் வலய உதவி கல்விப் பணிப்பாளர் வைபரீதியாகத் திறந்து வைத்தார். கல்லூரியின் இட வசதியின்மை இப் புதிய கட்டிடத்தினால் தீர்க்கப்பட்டிருப்பதாக கல்லூரி அதிபர் கூறினார்.

**• பருத்தித்துறை**

பருத்தித்துறை புலோலி பகுதிக்கு இலங்கை மின்சார சபையால் 24 மணிநேர மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தினால் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு மின்வசதி கிடைத்தமையால் பிரதேச மக்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளனர்.

**• பலாலி**

மக்கள் வங்கியின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்டரீதியாக நடாத்தப்பட்ட கிரிகெட் சுற்றுப் போட்டிகளின் யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பலாலி ஆசிரியர் கலாசாலை அணி வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது. வடபிராந்திய போக்குவரத்து சபை அணியினர் இவர்களை எதிர்த்துப் போட்டியிட்டனர்.

**• சுன்னாகம்**

பிரதேச சபையும் வ.போ.ச.வும் இணைந்து சுன்னாகம் பஸ் நிலையத்தை நவீனமயமாக்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. 1995 ஆம் ஆண்டுக்குப் பின் சுன்னாகம் பகுதி வழமைக்குத் திரும்பிவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**• மாவிட்டப்புரம்**

பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வலிகாமம் பிரதேச சபையால் மாவிட்டபுரம்-மயிலிட்டி வீதியை "சுவாமிநாதன் வீதி" எனவும் கட்டுவன் மேற்கு பட்டம் தோட்டம் வீதி "ஐயாத்துரை வீதி" எனவும் அளவெட்டி கிழக்கு கும்பாலை வீதியை "பாரதி வீதி" எனவும் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

## அமெரிக்கா நீதி மன்றத்தில் எல்.ரி.ரி.ஈ. யின் மேல் முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டது

அமெரிக்கா இராஜாங்கச் செயலாளர் மெடலின் ஆல்பிரைட் அவர்களால் இரண்டு வருடங்களுக்கு முன்பு எல்.ரி.ரி.ஈ. ஒரு பயங்கரவாத இயக்கமொன்றாகப் பிரகடனப்படுத்தியது தெரிந்ததே. இப் பிரகடனத்தை எதிர்த்து எல்.ரி.ரி.ஈ. யினரால் சமர்ப்பித்த மேல் முறையீட்டு மனுவை மூன்று நீதிபதிகளைக் கொண்ட கொலம்பியா மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ. க்கு நிதி, பொருட்கள் உதவி வழங்குவது அமெரிக்கா ஐக்கிய குடியரசில் சட்ட விரோத செயலாகும்.

## நல்லைக் கந்தன் வருடாந்த மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்றது

இலங்கைத் திரு நாட்டின் புராண வரலாற்றுப் பெருமைமிக்க நல்லைக் கந்தன் வருடாந்த மஹோற்சவம் ஆகஸ்ட் 16 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாகத் தினமும் பல்லாயிரக்கணக்காண முருகப் பெருமானின் அடியார்கள் கலந்து கொண்ட 25 திருவிழாக்களும் மிகச் சிறப்பாக முடிவடைந்தன.

தேர், தீர்த்தம், மஞ்சம், பூங்காவனம் ஆகிய திருவிழாக்களில் கலந்து கொள்வதற்காக இப் புனிதஸ்தலத்தை நோக்கி நாட்டின் நாலா புறங்களிலிருந்தும் அடியார்கள் அணிஅணியாக வந்தடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.கந்தனின் புகழ் பாடிவரும் பஜனைக் கோஸ்ரிகளும் பாதயாத்திரை செய்துவரும் அடியார்களும் தினமும் நல்லூரை நோக்கி வந்தவண்ணம் இருந்தனர்.

அரசநிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் தொண்டர் படைகளும் அடியார்களின் வசதிகளுக்கான பல ஏற்பாடுகளை செய்திருந்ததுடன் பக்தர்களின் போக்குவரத்து வசதிகளுக்கான தாராளமான பஸ் சேவைகள் வட மாகாண போக்குவரத்து சபையால் மிக நன்றாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணி விசாரணைகளுக்கு சர்வதேச அவதானிகளின் பாராட்டு

செம்மணி இரண்டாம் கட்ட ஆராய்வுகளில் 9 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ் எலும்புக்கூடுகளில் ஒன்று பெண்ணினுடையது என நம்பப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இவ் விசாரணை தொடர்பான சர்வதேச அவதானிகள் குழுவின் அங்கத்தவர் ஒருவராகிய அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினரும் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான வைத்திய நிபுணருமாகிய டாக்டர் வில்லியம் ஹோக்லண்ட் கொழும்பில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் மாநாட்டில் தனது கருத்துத் தெரிவிக்கையில் நாட்டில் ஒரு போர் நடந்துகொண்டிருக்கையில் அரசு தமது படையினர் புரிந்ததாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பாக புலன்விசாரணைகள் நடாத்திவருவது வேறு எந்த ஒரு நாடாவது செயல்படுவதற்கு முன்வராத வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகக் கூறியுள்ளார். எவ்வித தடங்கலுமின்றி செம்மணி விசாரணைகள் நடைபெற்றதாக டாக்டர் ஹோக்லண்ட் மேலும் தெரிவித்துள்ளார்.மண்ணியல் பகுப்பாய்வாளர் மெலிசா ஹெண்ட், கனேடிய பொலிஸ் பிரதம புலன் விசாரணையாளர் ரொபர்ட் ஸ்டயர் ஆகிய சர்வதேச அவதானிகள் இவ் விசாரணை தொடர்பான அரசு ஈடுபாடுகளை பாராட்டினார்கள்.

காணாமற் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களை மற்றும் பத்திரிக்கையாளர்களை விசாரணை இடங்களுக்கு அனுமதிக்கப்பட்டமை அரசின் வெளிப்படைக் கொள்கையும் பொறுப்புணர்வையும் தெளிவுபடுத்துவதாக ஆசிய பௌண்டேஷன் பிரதிநிதி மார்க் மெக்கனா எடுத்துரைத்தார்.

## அமைதி நகரமாகிய திருகோணாமலை

பல்லாண்டு காலமாக பல இனத்தவர்களும் பல சமயங்களைச் சார்ந்தவர்களும் பலதரப்பட்ட கலை கலாச்சார பண்பாடுகளுடன் சமூக பொருளாதார விடயங்களில் அன்னியொன்னியமாக வாழ்ந்து வரும் இலங்கையின் கிழக்குமாகாணத்தில் அமைந்திருக்கும் அதிமுக்கிய உல்லாச நகரமொன்றாகிய சரித்திரப் புகழ் பெற்ற திருகோணமலை மாநகரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார அமைப்பால் UNESCO அமைதி நகரமாக City of Peace பிரகடனப்படுத்த முன்வைத்த ஆலோசனைக்கு இலங்கை அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐ.நா. வின் உலக அமைதி நாளாகிய செப்டம்பர் 14 ம் திகதியன்று இந்த அமைதி நகரம் பிரகடன வைபவங்கள் திருகோணமலை (St. Mary's College) புனித மேரி கல்லூரியில் சிறப்பாக இடம் பெற்றதாக யுனெஸ்கோ இலங்கை செயலாளர்நாயகம் பிரேமதாச உடகம அவர்கள் தகவலளித்தார.

மக்களின் இதயத் துடிப்பை நன்றாக புரிந்த புனித மேரி கல்லூரி அதிபர் அருட் சகோதரி ராணி தெரேசா முன்னரே திருகோணமலை தமிழ் சிங்கள பள்ளிமாணவர்களுக்கிடையில் இரு இனத்தவர்களின் கலாச்சார பரிமாற்றத்தை ஏற்படுத்தும் முகமாக விளையாட்டுப் போட்டிகள் ,இரு இனத்தவர்களின் பாரம்பரிய இசை நடன நிகழ்சிகள், உல்லாசப் பயணங்கள் ஆகியவை ஒழுங்கு செய்ததன் மூலம் பல இனத்தவர்களுக்குமிடையில் நல்லெண்ணத்தையும் உறவையும் வளர்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளை "நம்பிக்கை" சர்வதேச வெளியீடு கௌரவத்துடன் நினைவுப்படுத்துகிறது. திருகோணமலை அமைதி நகரமாக பிரகடனப்படுத்தும் UNESCO நடவடிக்கையும் அவரை மேலும் ஊக்குவிக்க வழிகோலுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பை எல்.ரி.ரி.ஈ. உறுதிப்படுத்த வேண்டும்

**சர்வதேச மன்னிப்புச் சபை**

தமிழ் கட்சிகளைப் பிரதி நிதித்துவப் படுத்தும் ஸ்ரீ லங்கா பாராளுமன்ற, உள்ளூராட்சிமன்ற மக்கள் உறுப்பினர்களின் உயிர்களுக்கு அபாயம் விளைவிக்கும் எல்.ரி.ரி.ஈ. யின் நடவடிக்கைகள்மீது சர்வதேச மன்னிப்புச் சபை ஆழ்ந்த கவனம் செலுத்தியுள்ளதுடன் நிராயுத சிவிலியன்களையும், அரசியல் பிரமுகர்களையும் துன்புறுத்துவதும், படுகொலை செய்வதையும் கண்டித்துத் தெளிவான அறிக்கையொன்றை வெளியிடும்படி சர்வதேச மன்னிப்புச் சபை எல்.ரி.ரி.ஈ. யினரை கட்டாயப் படுத்தியுள்ளது.

1999 ஆகஸ்ட் 24 ஆம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபையின் வெளியீட்டில் அரசியல் வாதிகளையும், சிவிலியன்களையும் படுகொலை செய்ததன் மூலம் எல்.ரி.ரி.ஈ. யினர் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது. அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் எல்.ரி.ரி.ஈ. யினரின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலினால் கொலை செய்யப்பட்டார். தாங்கள் வகிக்கும் பதவிகளைத் துறக்குமாறு எல்.ரி.ரி.ஈ. விடுத்திருந்த கோரிக்கையை பொருட்படுத்தாது மக்கள் சேவையில் ஈடுபட்டிருந்த மக்கள் பிரதிநிதிகளுள் யாழ் மேயர் சறோஜினி யோகேஸ்வரன், பொ. சிவபாலன் (1998) திருமலை பாராளுமன்ற உறுப்பினர் ஏ. தங்கத்துரை (1989) உட்பட மற்றும் பல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எல்.ரி.ரி.ஈ. யினரால் படுகொலை செய்யப்பட்டதை சர்வதேச மன்னிப்புச் சபை எடுத்துக் காட்டியுள்ளது.

1949 ஆம் ஆண்டு ஜெனீவா உடன்படிக்கையில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்காத தனிமனிதர்களை அரசாங்கங்களாலும் ஆயுதக் குழுக்களாலும் இம்சைப்படுத்துவதும் கொலை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. எல்.ரீ.ரீ.ஈ. யினர் இந்த உடன்படிக்கையின் சட்டமூலங்களுக்குக் கட்டுப்படுவதாக 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அறிவித்திருந்ததை எடுத்துக்காட்டும் சர்வதேச மன்னிப்புச் சபை எல.ரீ.ரீ.ஈ யினர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேணடும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

## நாகரீக சமுகம் நிராகரிக்கும் படுகொலைகள்

**எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளின் தாக்குதலினால் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 50 க்கு மேற்பட்ட குடியிருப்பு வாசிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட செய்தியை அறிந்து ஜனாதிபதி அவர்கள் மிகவும் அதிர்ச்சிக்குள்ளாகியதாக அறிவிக்கப்படுகிறது.**

**இப்படிப்பட்ட மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான மனிதக் கொலைகளை நாகரீகமுள்ள எச் சமுகமும் காட்டுமிராண்டித்தனங்களாக வன்மையாகக் கண்டிக்கும் என்பதுநிச்சயம் என ஜனாதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**உலகில் பல அமைப்புகள் புலிகளின் இந்த மனிதக் கொலைகளைக் கீழ்த்தரமான செயலாகக் கண்டனம் செய்துள்ளன.**

SRILANKAN AIRLINES

எமது தேசிய விமானச் சேவை புதிய வடிவத்தில் நவீன வசதிகளுடன் வளமையான இனிய விருந்துபசாரங்களுடன் மேலும் பல புதிய சேரிடங்களாகிய சிட்னி, பேறூட், ஸ்டொக்கோலம் நோக்கி **"ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ்"** எனும் புதிய பெயருடன் தற்கால வடிவமைப்புக்கு ஏற்ப மாற்றப்பட்ட மயில் சின்னத்துடன் பறந்து வருகிறது.

SriLankan

# நம்பிக்கை

சர்வதேச வெளியீடு

## பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கும் களியாட்டங்கள்

ஆகஸ்ட் 30 இல் இலண்டன் சௌத்ஹோலில் தமிழ் கிரிக்கட் கொண்டாட்டத்தின் போது, இரண்டு தமிழ் போட்டிக் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கியுள்ளதை எடுத்துக்காட்டும் செயலாகக் கருதப்படுகிறது. இநதியா, கனடா, ஜேர்மன், சுவிஸ்சர்லாந்து, பிரான்ஸ், மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் முன்பு ஏற்பட்டதைப் போன்று அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் தெருச்சண்டை உட்பட பயங்கரவாதம் என்பவற்றினால், வெளிநாடுகளில் வழமையாக அமைதியை விரும்பி வாழுகின்ற இலங்கைத் தமிழ் சமூகத்தினருக்கு இந்த இலண்டன் சம்பவம் இழிவான பெயரைப் பெற்றுத்தந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் எல்.ரி.ரி.ஈ. யின் இலண்டன் தலைமையதிகாரி ஏ.சீ.சாந்தன் கலந்துகொண்டமை, விளம்பரங்கள், அலங்காரங்கள் ஆகியவற்றின் புகைப்படங்கள் இந்நிகழ்ச்சியை ஒழுங்குசெய்த (U.T.O.) ஐக்கிய தமிழ் அமைப்புக்கும் எல்ரி.ரி.ஈ. க்கும் இடையிலான தொடர்பை தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

காளான் பூத்ததைப்போன்று உலகெங்கும் திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சமூக நிகழ்சிகள் கொண்ட "நிவாரண நிதி" நிகழ்சிகள் முன்னணி அமைப்புகளினால் எல்.ரி.ரி.ஈ. யின் பணப் பொட்டலத்தை நிரப்புவதற்கே ஒழுங்கு செய்யப்படுகிறது. ஆர்வத்துடன் இநத சமூக நிகழ்சிகளில் கலந்துகொள்ளும் இளம் வயதினருள் பெரும்பாலானோர் தாங்கள் செலுத்தும் நுளைவுக் கட்டணங்கள் கோரமான விளைவுகளைத் தரும் நாசகார வேலைகளுக்கு பயன்படுவதை அறிவதில்லை. விழாவில் கலந்துகொண்ட எத்தனை வாலிபர்கள்தான் இதை ஆழமாக சிந்தித்திருப்பார்கள் ? பிறந்த நாட்டில் பயங்கரவாதத்தை பேணுவதற்கு துணைபுரியும் குற்றத்திற்கு ஆளாக்கப்படுவதை எத்தனை பேர்தான் அறிவார் ? பிள்ளைகள் கலந்துகொள்ளும் நிகழ்சிகள் பற்றி அவதானித்து அறிந்து எத்தனை பெற்றோர்கள்தான் தமது பிள்ளைகளுக்குப் போதிய புத்திமதிகளைச் சொல்கிறார்கள் ?

இளஞர்களின் மனதைக் கவரும்வகையில் எல்.ரி.ரி.ஈ. யும் அதன் முன்னணி அமைப்புகளும் உலகின் பலநாடுகளில் ஒழுங்கு செய்து வரும் விளையாட்டு, சமூக நிகழ்சிகளிலும், மகாநாடுகள் ஊர்வலங்கள் ஆகியவையும் போதைப் பொருள் விற்பனை செய்பவர்களும், குற்றச் செயல் குழுக்களும் உலாவும் மற்றும் பணம் வசூல் செய்யும் போட்டிக் குழுக்கள் அவர்களது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் "போர்க்களம்" ஆக மாறிவருகின்றதை உலகிற்கு எடுத்துக்காட்டும் கண்ணாடியாக இலண்டன் நிகழ்வுகள் அமைகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத் தேரோற்சவம்


பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தின் 4 ஆவது தேர்த்திருவிழா செப். 12 ஆம் திகதி மிகச் சிறப்பாக நடைபெற்றது.தேர் பவனிவரும் வீதிகளில் வாகன நடமாட்டங்கள் முற்றாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மாணிக்க விநாயகரின் தரிசனத்திற்காக வீதியோரங்களில் பக்திப் பரவசத்துடன் காத்திருந்தனர். குறிப்பிட்ட வீதிகளின் ஊடாக கற்பூரச்சட்டி, காவடியாட்டம், கரகாட்டம், சகிதம் நாதஸ்வர இசையுடன் ஊர்வலம் வந்த இக் கணேஷ தேரோற்சவம் இந்து சமய வழிபாடுகளையும் கலை கலாச்சார சம்பிரதாயங்களையும் உலகிற்கு எடுத்துக்காட்டிய சமய உற்சவமாக அமைந்திருந்தது. அந்நிய தேசங்களில் வாழ்ந்துவரும் எமது சமூகத்தினருக்கு எமது பண்பாடுகளையும், கலை கலாச்சாரங்களையும், சமயநெறிகளையும் பற்றிய புத்துணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்த இக் கணேஷ தேரோற்சவம் மக்களின் அன்றாட இயந்திர வாழ்க்கையை சற்று மறந்து மனச்சாந்தியும் நிவாரணமும் அடையவைத்தது.

தேவாலயத் தொடர்பு விபரங்கள் :
**SRI MANIKKA VINAYAKAR ALAYAM**
**72, rue Philippe de Girard**
**75018 Paris FRANCE**
**Tel. : +33 (0)1-40-31-21-89.**


தேரையும் பக்தர்களின் கூட்டத்தையும் படத்தில்க்காண்க

## மலேசியா ஸ்ரீலங்கா நல்லுறவை வலுப்படுத்திய கலை நிகழ்ச்சி

இலங்கை வம்சாவழியைச் சேர்ந்த இரு மலேசியாக் கலைஞர்கள் மலேசியாவில் வசிக்கும் ஒரு ஈழத்துக் கலைஞருடன் இணைந்து நடாத்திய "பண்ணும் பரதமும்" தென் இந்திய சாஸ்திரீய நடன, சங்கீத கலைக்கதம்ப நிகழ்ச்சியொன்று ஜுலை 14 ம் திகதி கொழும்பு இராமகிருஸ்ணா மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இலங்கை-மலேசியா நாடுகளுக்கிடையிலான இன-கலாச்சார உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இந்து சமய, கலாச்சார திணைக்களத்தால் ஒழுங்கு செய்திருந்த இக் கலை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக இலங்கையின் மலேசிய உயர் ஸ்தானிகர் சம்சுதீன் அப்துல்லா அவர்களும் கௌரவ விருந்தினராக சமய,கலாச்சார அமைச்சின் மேலதிக செயலாளர் நடராஜா பரமசோதி அவர்களும் கலந்து கொண்டனர்.









இந்தக் கலாச்சார நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீமதி விஜலக்ஷ்மி குலவீரசிங்கம், ஸ்ரீமதி சங்கீதா நமசிவாயம் மற்றும் விபுல வனிகசேகர ஆகிய கலைஞர்கள் மலேசியாவிலிருந்து வருகை தந்திருந்தார்கள். வயலின் வித்துவானாகக் கலந்துகொண்ட இலங்கை வம்சாவழியைச் சேர்ந்த ஸ்ரீமதி விஜயலஷ்மி குலவீரசிங்கம் அவர்கள் தேர்ச்சி மிகு பாடகியாகவும் வயலின் வித்துவானாகவும் நான்கு தசாப்த காலமாக மலேசியா இலங்கையர்களுக்கு ஆசிரியையாகச் சேவை புரிந்து வருகிறார். மலேசியாவை வசிப்பிடமாக்கிக் கொண்ட இலங்கைத் தமிழராகிய நாட்டிய லஷ்மி சங்கீதா மனோகரன் நமசிவாயம் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் இரண்டு வாத்திய இசை பொழிந்தார். இவர் மலேசியாவில் மிகச் சிறந்த பரதநாட்டியக் கல்லூரியொன்றை நடாத்தி வருகிறார்.

மலேசியாவின் இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தில் ஆலோசகராகக் கடமையாற்றும் விபுல வனிகசேகர அவர்கள் இக் கச்சேரியில் கர்நாடக இசையில் கல்யாணி, ரேவதி,சிந்துபைரவி,வசந்த, தன்யாசி ஆகிய இராகங்களிற் பாடிய ஐந்து பாடல்களில் நல்லூர் நாதனின் பக்தர்களுக்காகப் பாடிய "நல்லூர் நாதன்" பாடல் இரசிகர்களை மெய்மறக்கச் செய்தது.

இக் கலை நிகழ்ச்சியில் இலங்கைக் கலைஞர்களாகிய கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவிகளின் "நாட்டிய மஞ்சரி" பரத நாட்டிய நடன நிகழ்ச்சியும் ஸ்ரீமதி கௌசல்யா பெர்ணாண்டோ அவர்களின் இலங்கை சம்பிராதாயப் பாடல்களும் இடம் பெற்றது.

கொழும்பில் நடைபெற்ற இந்த இரு நாட்டுக் கலைஞர்களின் சாஸ்திரிய நடன சங்கீதக் கலைவிழா மலேசியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்துவரும் இரு நாட்டவர்களுக்கிடையில் இன-கலாச்சார உறவுகளை ஏற்படுத்தும் பாலமாக அமைந்தது.

1. சங்கீதா
2. விஜயலக்ஷ்மீ
3. விபுல
4. வாசுகி

**சகல விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
"NAMBIKKAI" International
Ambassade du Sri Lanka - 15 rue d'Astorg - 75008 Paris - FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்